**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ம் நாள் திங்கட்கிழமை

**<u>உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கு எண்.02/2025</u>**
**<u>(CNR.No.TNMD240002362025)</u>**

பவுன்தாய் என்ற மீனாட்சி ... மேல்முறையீட்டாளர்/மனுதாரர் /வாதி

// எதிராக //

1) நடராஜன்
2) திலீபன் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

<u>வாதியால், இம்மேல்முறையீடானது, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம் உசிலம்பட்டி, ஐ.ஏ.எண். 43/2024- இன்-அசல் வழக்கு .எண்.15/2024-ல், கடந்த 10.03.2025-ம் தேதி, பிறப்புவித்திருக்கிற உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.</u>

**<u>இடையே</u>**

பவுன்தாய் என்ற மீனாட்சி ... மனுதாரர்/வாதி

// எதிராக //

1) நடராஜன்

2) திலீபன் ...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கானது, என் முன்பாக கடந்த 16.03.2026–ம் தேதியில், இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மேல்முறையீட்டாருக்காக, கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.கணபதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இரு தரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணை படித்து பார்க்கப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

<u>உ த் த ர வு:–</u>

மேல்முறையீட்டாளர்களால், இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீடானது, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1–நீதிமன்றம் உசிலம்பட்டி, ஐ.ஏ.எண். 43/2024– இன் – அசல் வழக்கு எண்.15/2024–ல், கடந்த 10.03.2025–ம் தேதியில், பிறப்புவித்திருக்கிற உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்யக்கோரி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**<u>2) இம்மேல்முறையீட்டு குறிப்பாணையின் சுருக்கம்:–</u>**

i) மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் வாதி ஆவார். தாவா அசல் வழக்கானது, எதிர்மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக

உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். தாவா சொத்தான சர்வே எண்.94/1–ல் கண்ட செண்ட் 67 ஆதியில் லாடத்தேவர் மகன்களான துரைச்சாமித்தேவர், சிங்கம் என்ற கந்தசாமித்தேவர் மற்றும் சீனிமாயாண்டித்தேவர் அகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி மூன்று சகோதரர்களும் வாக்காரால் பாகம் பிரித்ததில் தலா 22 1/3 செண்டு தனித்தனியாக பிரித்து அனுபவம் செய்து வந்தார்கள். மேற்படி துரைச்சாமித்தேவர் பாகத்திற்கு சர்வே எண். 94/1–ல் கீழ்புறம் கிடைத்தது. மேற்படிம சொத்தை துரைச்சாமித்தேவரின் மகனான ஆதிமாயாண்டித்தேவர் அனுபவம் செய்து வருகிறார். மற்ற பகுதிகளை சீனிமாயாண்டித்தேவர் ஆதிமாயாண்டித்தேவருக்கு கடந்த 10.06.1974–ல் கிரையம் கொடுத்தார். மற்றொரு நபரான சிங்கம் என்ற கந்தசாமியின் மனைவி ஆயக்காள் என்ற மாயக்காளுக்கு சர்வே எண். 94/1–ல் கீழ்புறம் செண்ட் 22 1/3–ஐ கிரையம் கொடுத்தார். மேற்படி மாயக்காளும், சிங்கம் என்ற கந்தசாமியும் சேர்ந்து மனுதாரர் / வாதிக்கு கடந்த 14.05.1991–ல் சர்வே எண். 94/1–ல் செண்ட் 67–ல் கீழ்புறம் 44 2/3 கிரையம் செய்து கொடுத்தார்கள். மேற்படி கிரையத்திற்கு பிறகு மனுதாரர் / வாதி தாவா சொத்தான செண்ட் 44 2/3 –ஐ அனுபவம் செய்து வருகிறார். அதன் பின், செண்ட் 44 2/3 பட்டா கொடுப்பதற்கு பதிலாக 5 செண்ட் குறைவாக 39 1/2 செண்ட் மனுதாரர் / வாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த விவரத்தினை விசாரணை நீதிமன்றம் சரியாக பரிசீலனை செய்யவில்லை. மேற்படி 5 செண்டைப் பொறுத்து மனுதாரர் / வாதி 2–ம் எதிர்மனுதாரர் மீது அசல் வழக்கு எண். 84 / 2022 என்ற உரிமையியல்

வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி 5 செண்டில் வடபுறத்தில் 2–ம் எதிர்மனுதாரர் வீடு கட்ட முயற்சித்தார். அதனை மனுதாரர் / வாதி தடுத்துவிட்டார். ஆகையால், மனுதாரர் / வாதி கிரையம் பெற்ற சொத்தில் 2–ம் எதிர்மனுதாரரை உழவடை செய்யவிடவில்லை. அதற்கான வழக்குமூலம் ஏற்பட்டதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியிருக்கிறது. 2–ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்த முருகேசனின் தாத்தா துரைச்சாமித்தேவர் என்பவர் தாவா சொத்து அடங்கிய சர்வே எண். 94/1–ல் செண்ட் 67 மேற்புறம் செண்டு 22 1/4 பாத்தியம் உள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. ஆகையால், இடைநிலை மனு எண். 43/2024–ன் படி மனுதாரர் / வாதி எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்பதற்கு வழக்கு மூலம் உள்ளது. ஆகவே, விசாரணை நீதிமன்றம் கடந்த 10.03.2025 அன்று I.A.No. 43 / 2024–ல் பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணையை ரத்து செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்க வேண்டும் என்பதாகும்.

**3) இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?**

இம்மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**4) பிரச்சனைக்குரிய தீர்வு:–**

i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் / வாதி இம்மேல்முறையீட்டில் அடையும் குறைபாடு ஏற்கத்தக்கதா? என பார்க்கும் போது, முதலாவதாக சர்வே எண். 94/1–ல் கட்டுப்பட்ட 67 செண்டை ஆதியில் லாடத்தேவர் மகன்களான துரைச்சாமித்தேவர், சிங்கம் என்ற கந்தசாமித்தேவர் மற்றும் சீனிமாயாண்டித்தேவர் ஆகியோர்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்பதாகும். அவ்வாறு மூன்று பேரும் வாய்க்காரால் பாகம் பிரித்துக்கொண்டால் மூன்று நபர்கள் பெயருக்கும் தனித்தனியாக பட்டா ஏற்பட்டிருக்க வேண்டும். தாவா வழக்குரையில் மேற்படி மூன்று பேரும் எந்த தேதியில் வாய்க்காரால் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என குறிப்பிடவில்லை. மேற்படி மூன்று நபர்கள் பெயருக்கும் ஏற்பட்ட பட்டாக்களை குறிப்பிடவில்லை. மூன்று நபர்களும் சர்வே எண். 94/1–ல் கட்டுப்பட்ட 67 செண்டை தனித்தனியாக அனுபவம் செய்து வருவதற்கு ஆவணங்கள் இல்லை. ஆக, வாய்மொழி பாகமாக தாவா வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போன்று மேற்படி மூன்று நபர்களுக்கும் தலா 22 1/2 செண்டு பிரித்தார்களா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் துரைச்சாமித்தேவருக்கு மேல்புறம் செண்ட் 22 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா? சீனிமாயாண்டித்தேவருக்கு நடுப்புறம் செண்ட் 22 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா? சிங்கம் என்ற கந்தசாமித்தேவருக்கு கீழ்புறம் செண்ட் 22 1/3 பாகம் கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். மேலும், மனுதாரர் / வாதி இரண்டு பங்குதாரர்களிடமிருந்து

சர்வே எண். 94/1–ல் கட்டுப்பட்ட 67 செண்டில், கீழ்புறமாக செண்டு 44 2/3 கிரையம் பெற்றரா? கிரையம் பெற்ற பிறகு 5 செண்டிற்கு குறைவாக பட்டா வழங்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும்.

ii) அடுத்ததாக, தாவா வழக்கில் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையை பரிசீலனை செய்யும் போது, மனுதாரர் / வாதி கூறுவது போன்று மூன்று பாகமாக பிரிக்கப்பட்டது என்பதை மறுத்திருக்கிறார். அவ்வாறு மறுக்கும் போது, வாதி தாவா வழக்கினை மெய்பிக்க கடமைப்பபட்டவர் ஆவார். வாதி தாவா சொத்து தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும். தாவா வழக்கில் வாதி விளம்புகை பரிகாரம் கோராமல் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார். ஆக, வாதிக்கு கிரைய ஆவணப்படி பட்டா வழங்கவில்லை. 5 செண்ட் குறைவாக பட்டா வழங்கப்பட்டுள்ள இடம் மனுதாரர் / வாதி அனுபவத்தில் இருக்கிறது என்பதை மனுதாரர் / வாதி தெளிவுபடுத்த வேண்டும். மனுதாரர் / வாதி தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

iii) அடுத்ததாக, வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை கவனத்தில் கொள்ளும் போது, வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வாதி விளம்புகை பரிகாரம் கேட்காமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டிருப்பது கிடைக்கத்தக்கதல்ல என்பதாகும். இதுசம்பந்தமாக, கீழ்காணும் முன்னோடி தீர்ப்புரை,

**2007(2) LW 632**

**The Bank of Tokya Mitsubishi Ltd –Vs– Spartex ceramics India Ltd**

**Lordship V.Danapalan**

When main and interim relief are one and the same relief interim injunction can not be granted.

**2010(3) MLJ 85**

**Jothi Ramalingam –Vs– M.N.Sivagnana Prakasam**

**Lordship R.Mala**

Since the suit propery is a vacant site and the possession is not proved. It is unsafe to grant injunction in favour of the Respondent / Plaintiff. It the Respondent / Plaintiff prove their title, The possession follows title and then only they are entitled to injunction.

மேற்கண்ட முன்னோடி தீர்ப்புரையை பரிசீலனை செய்யும் போது, வாதி அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரமும், I.A.No.43/2024–ல் கோரியுள்ள பரிகாரமும் ஒன்றாக இருப்பதால் I.A.No.43/2024–ல் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதை வழக்கு விசாரணையின் முடிவில் தான் தீர்மானிக்க முடியும். மேலும், வழக்கிடைச் சொத்து காலியிடமாக இருக்கும் போது, வழக்கிடைச் சொத்தைப் பொறுத்து, வாதி விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியிருப்பது ஏற்புடையது அல்ல என மேற்படி முன்னோடி தீர்ப்புரை தெளிவுபடுத்துகிறது. தற்போது, இந்த மேல்முறையீட்டில் ஆவணங்களை குறியீடு செய்ய

மேல்முறையீட்டாளர் I.A.No.1/2025 மற்றும் I.A.No.5/2025 ஆகிய மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களை ஏன் விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்பதற்கு மனுதாரர் / வாதி உரிய விளக்கம் மனுவில் சொல்லவில்லை. மேற்படி ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். எனவே, மேற்படி I.A.No.1/2025 மற்றும் I.A.No.5/2025 மனுக்கள் இந்த மேல்முறையீட்டில் ஏற்கத்தக்கல்ல. ஆக, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணையில் குறுக்கீடு செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை . எனவே, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணை உறுதி செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, விசாரணை நீதிமன்றம் இடைநிலை மனு எண். எண்.43/2024-ல் கடந்த 10.03.2025-ம் தேதியில், பிறப்புவித்திருக்கிற உத்தரவும் மற்றும் உத்தரவாணையும் இதன்மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு, இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இம்மேல்முறையீட்டின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை ஏதுமில்லை.

இவ்வுத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு, நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் நாள், திங்கட்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் வையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.06 15:25:50 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

<u>இருதரப்பிலும் எவ்விதமான சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை.</u>

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.06 15:25:55 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

06.04.2026

உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு
வழக்கு எண்.02/2025

சீரான /வரைவு /உத்தரவு